# 12 கீரியும் பாம்பும்



ஓர் ஏழை விவசாயி ஒரு கீரி வளர்த்தான். அந்தக் கீரி மிகவும் கெட்டிக்காரத்தனம் உடையது. எஜமான் விசுவாசமும் கொண்டது. ஒருநாள் விவசாயி எங்கோ சென்றிருந்தான். விவசாயியின் மனைவி தன் குழந்தைக்குப் பால் ஊட்டிவிட்டுத் தூங்க வைத்தாள். தண்ணீர் எடுத்துவரக் கிணற்றடிக்குக் குடத்துடன் சென்றாள். கீரி காவலுக்கு நின்றது.

விவசாயியின் மனைவி சென்ற பின்பு கரு நாகம் ஒன்று அங்கே வந்தது. குழந்தை பாயில் தூங்கிக் கொண்டிருந்தது. பாம்பு குழந்தைக்குப் பக்கமாகச் சென்றது. இதைக் கீரி பார்த்தது. பாம்பின் மேல் தாவியது.

கீரி பாம்பைக் கடித்தது. துண்டு துண்டாக்கியது. விவசாயியின் மனைவி வரும்வரை காத்திருந்தது.

விவசாயியின் மனைவி குடத்தை நிரப்பிக்கொண்டு திரும்பினாள். அவள், வீட்டின் வெளியே கதவருகில் நின்றுகொண்டிருந்த கீரியைக் கண்டாள். கீரியின் முகத்தில் இரத்தத்தைக் கண்டாள். அவள் தன் குழந்தையைக் கீரி கடித்துவிட்டது என நினைத்தாள். துக்கத்தாலும், கோபத்தாலும் நீர் நிரம்பிய குடத்தைக் கீரியின் மேல் போட்டாள். அப்பாவியான கீரி துடிதுடித்து இறந்துவிட்டது.

அந்தப் பெண் வீட்டினுள் ஓடினாள். அங்கே குழந்தை சுகமாகத் தூங்கிக்கொண்டிருந்தது. ஒரு கருநாகம் கொல்லப் பட்டிருந்தது. அப்பொழுது தான் அவளுக்கு உண்மை விளங்கியது. இறந்த கீரியை மடியில் வைத்துக் கொண்டாள். அழத் தொடங்கினாள். ஆனால் அவளுடைய அழுகையால் இப்போது என்ன பயன்? கண் கெட்ட பின் சூரிய நமஸ்காரம் எதற்கு?.

**எண்ணித் துணிக கருமம், துணிந்த பின்**

**எண்ணுவம் என்பது இழுக்கு.**

## செயற்பாடு - 01

**பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும், பிழையாயின் (✓) எனவும் எழுதுங்கள்.**

1. ஓர் ஏழை விவசாயி கருநாகம் ஒன்றை வளர்த்தான்( )
2. விவசாயியின் மனைவி தன் குழந்தைக்குப் பால் ஊட்டித் தூங்க வைத்தாள். ( )
3. நாய் காவலுக்கு நின்றது. ( )
4. கீரி துடிதுடித்து இறந்தது. ( )
5. குழந்தையைக் கீரி கடித்துவிட்டது. ( )

## செயற்பாடு - 02

**பின்வரும் இடைவெளிகளை நிரப்புங்கள்.**

1. ஓர் ஏழை விவசாயி ஒரு ________________ வளர்த்தான்.
2. கீரி ________________ நின்றது.
3. மனைவி சென்ற பின்பு ________________ ஒன்று அங்கே வந்தது.
4. கீரியின் முகத்தில் ________________ பார்த்தாள்.
5. அந்தப் பெண் ________________ ஓடினாள்.

## சொல் அறிமுகம்

| | |
|---|---|
| **ஏழை** | - දුප්පත් |
| **விவசாயி** | - ගොවියා |
| **கெட்டிக்காரத்தனம்** | - දක්ෂකම |
| **எஜமான் விசுவாசம்** | - ස්වාමියා කෙරෙහි ඇති විශ්වාසය |
| **பால் ஊட்டி** | - කිරිපොවා |
| **கிணற்றடி** | - ළිඳ අසළ |
| **காவலுக்கு** | - මුරට |
| **கருநாகம்** | - කළු නයා |
| **துண்டு துண்டாக்கியது** | - කෑලි කෑලිවලට කැඩුවේය |
| **இரத்தம்** | - ලේ |
| **துக்கம்** | - දුක |
| **கோபத்தால்** | - කෝපයෙන් |
| **நிரம்பிய** | - පිරුණු |
| **அப்பாவி** | - අහිංසක |

## செயற்பாடு - 03

**பின்வருவனவற்றுக்கு விடை எழுதுங்கள்.**

1. கீரியின் இயல்புகள் இரண்டைத் தருக.

2. குழந்தை எங்கே தூங்கிக் கொண்டிருந்தது?

3. விவசாயியின் மனைவி முகத்தில் இரத்தத்துடன் இருந்த கீரியைப் பார்த்து என்ன நினைத்தாள்?

4. விவசாயியின் மனைவி கீரிக்கு என்ன செய்தாள்?

5. இக்கதை கூறும் படிப்பினை யாது?

## செயற்பாடு - 04

**பொருத்தமான சொல்லை வைத்து இடைவெளி நிரப்புங்கள்.**

**(பெண், பாயில், கீரியைக், குடத்துடன், குழந்தைக்கு)**

1. கிணற்றடிக்குப் ____________ சென்றாள்.

2. குழந்தை ____________ தூங்கிக்கொண்டிருந்தது.

3. தண்ணீர் எடுத்துவர கிணற்றடிக்குக் ____________ சென்றாள்.

4. கதவருகில் நின்று கொண்டிருந்த ____________ கண்டாள்.

5. ____________ பால் ஊட்டினாள்.

**பின்வரும் வாக்கியத்தை அவதானியுங்கள்.**

விவசாயியின் மனைவி தன் குழந்தை'**க்கு**' பாலூட்டிவிட்டுத் தூங்க வைத்தாள்.

குழந்தை ⟶ குழந்தை**க்கு**

குழந்தை**க்கு**ப் பாலூட்டினாள்.

கீரி ⟶ கீரி**க்கு** அடித்தாள்.

அவள் ⟶ அவளு**க்கு** உண்மை விளங்கியது.

## செயற்பாடு - 05

**பின்வரும் சொற்களைக்கு 'கு' உருபு சேர்த்து வாக்கியங்களை முழுமைப்படுத்துங்கள்.**

**(கீரி, பிள்ளை, தம்பி, கடை, நண்பன்)**

1. ________________ பரிசு கொடுத்தார்.
2. ________________ கடிதம் எழுதினார்.
3. ________________ வீட்டுக்கு போனார்.
4. ________________ பகை பாம்பு.
5. ________________ உணவு ஊட்டினார்.